## திருச்சி ரயில்வே கோட்டத்தில் இந்தியில் மட்டும் பெயர்ப் பலகை:

# கருப்பு மை கொண்டு அழித்து தி.மு.க.வினர் போராட்டம்!

### மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமையில் – மேயர் அன்பழகன் முன்னிலையில் – கழகத்தினர் முற்றுகை!







திருச்சி,மார்ச்.5-

“இந்தியில் பெயர் பலகை” வைத்திருந்த திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி தலைமையில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் முன்னிலையில் தி.மு.க.வினர் போராட்டம் நடத்தினர்.

ரயில்வே நுழைவு வாயில் கல்வெட்டில் இருந்த இந்தி எழுத்தை கருப்பு மை கொண்டு அழித்தனர்.

திருச்சி ரெயில்வே கோட்ட மேலாளர் அலுவலகம் திருச்சி ஜங்சன் ரயில் நிலையம் அருகே அமைந்துள்ளது. அந்த ரயில் நுழைவு வளைவு புதிதாக கட்டப்பட்டுள்ளது.

இதில், அலுவலக வாயில் என்பதை இந்தி வார்த்தையில் “கர்தவ்ய த்வார்” குறிப்பிடுகின்றனர். இதனை, கர்தவ்ய த்வார் என தமிழ் எழுத்துக்களைக் கொண்டும், KARTAVYA DWAR என்ற ஆங்கில எழுத்துக்களைக் கொண்டும் எழுதியுள்ளனர்.

அலுவலக நுழைவாயில் என்பதை தமிழர்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாத வகையில், தமிழ் எழுத்துக்களை கொண்டு இந்தி மொழி வார்த்தையில் எழுதியுள்ள ரயில்வே நிர்வாகத்தினரை கண்டித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் உள்ளிட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலக நுழைவாயில் முன்பாக, தி.மு.க.வினர், திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி அவர்கள் தலைமையில் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் அவர்கள் முன்னிலையில் 500க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் தடையை மீறி பேரணியாக சென்று முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்கள்.

மேலும் கல்வெட்டில் இருந்த இந்தி எழுத்தை மைகொண்டு அழித்து ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாவட்ட பொருளாளர் துரைராஜ், மண்டலக் குழு தலைவர் துர்கா தேவி, பகுதிச் செயலாளர் மோகன்தாஸ், கனகராஜ்,மாமன்ற உறுப்பினர்கள்,காஜா மலை விஜி, முத்துச்செல்வம், கலைச்செல்வி, ராமதாஸ் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**சென்னை,மார்ச்.5–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:**

**அகற்றப்பட்டது இந்தி எழுத்துகள் மட்டுமல்ல; ஆதிக்க வெறியின் ஆணவமும்தான்!**

**உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிப் போலித் தமிழ்ப்பற்று காட்டுபவர்களும் – அடிமைத்தனத்தின் அடையாளமாய் அவர்களுக்குத் துணை நின்று தமிழ்நாட்டுக்குத் துரோகம் இழைப்போரும் தமிழ்நாட்டு மக்களால் அகற்றப்படுவார்கள்!**

**தில்லியின் ஆணவத்துக்குத் தமிழ்நாடு என்றைக்குமே Out Of Control–தான்!**

**இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.**




## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மக்கள் நீதி மய்யம் பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று (4.3.2026) அண்ணா அறிவாலயத்தில் மக்கள்நீதி மய்யம் பொதுச் செயலாளர் பி.அருணாசலம் , துணைத் தலைவர் ஏ.ஜி.மௌரியா, துணைத் தலைவர் ஆர்.தங்கவேலு, மாநில செயலாளர் எஸ்.தட்சிணாமூர்த்தி ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - ஆம் ஆத்மி கட்சியுடன் பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று (4.3.2026) அண்ணா அறிவாலயத்தில் ஆம் ஆத்மி கட்சி மாநிலத் தலைவர் வசீகரன், மாநில குழு உறுப்பினர், மாநில மகளிரணிசெயலாளர் திருமதி ஸ்டெல்லாமேரி, மாநில வர்த்தக அணி செயலாளர் ஜாகீர் உசேன், மாநில பிரச்சாரக் குழு உறுப்பினர்ஜெயக்குமார் (வழக்கறிஞர்) ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

### மார்ச் 5,6,7 தேதிகளில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

## தென் மாவட்டங்களான நெல்லை - தென்காசி - தூத்துக்குடி மாவட்டங்களில் சுற்றுப்பயணம்!

### பல்வேறு அரசு நலத்திட்டங்களை வழங்குகிறார்!



நெல்லை.மார்ச்.5-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று 05-03-2026 முதல் 07-03-2026 ம் தேதி வரை 3 நாட்கள் அரசு சுற்றுப்பயணமாக நெல்லை தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நடைபெறும் அரசு நிகழ்வில் பங்கேற்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியும்,முடிவற்ற திட்ட பணிகளை துவக்கி வைத்தும், நடைபெறும் அரசு நிகழ்வுகளில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்கள்.

நெல்லை,தென்காசி மாவட்ட கழகங்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்திற்கு இன்று (05-03-2026 வியாழக்கிழமை) மாலையில் நெல்லை மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்பதற்காக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெல்லை வருகையை முன்னிட்டு நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ.நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் தலைமையில் சிறப்பான உற்சாகமான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

நாளை (06-03-2026 வெள்ளிக் கிழமை) காலை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தென்காசி மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்று நலத்திட்ட உதவி வழங்கியும்,

புதிய மாவட்ட விளையாட்டு மைதானத்தையும் ஆய்வு பணி மேற்கொள்கிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு வருகையை முன்னிட்டு

நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் சிறப்பான உற்சாகமான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதன் பின்னர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை 4 மணி அளவில் நெல்லை மாவட்டம் வள்ளியூரில் மாவட்ட தலைமை மருத்துவமனையை துவக்கி வைக்கிறார்.

அங்கு நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து குலசேகரத்தில் விளையாட்டு நிகழ்ச்சியிலும், குளச்சலில் நூலக திறப்பு விழாவிலும் பங்கேற்று சிறப்பிக்கிறார். இரவு 8 மணி அளவில் இறச்சகுளத்தில் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலையை திறந்து வைக்கிறார். பின்னர் இரவு 9-30 மணி அளவில் திருநெல்வேலி திரும்புகிறார்.

மறுநாள் 07-03-2026 சனிக்கிழமை அன்று காலை 10 -40 மணிக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடிக்கு சென்று அங்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெல்லை தென்காசி மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு நெல்லை,தென்காசி கழக மாவட்டங்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது

அனைத்து நிகழ்ச்சிகளிலும் மாவட்ட, மாநில, கழக நிர்வாகிகள்,தலைமை செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று மாவட்ட கழக பொறுப்பாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.